இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 24-02-2024

# சண்டிகர் தீர்ப்பு மகத்தானது

கடந்த பிப்ரவரி 1ஆம் தேதி வெளியான தலையங்கத்துக்கு ‘குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்..’ என்று தலைப்பு சூட்டப்பட்டு இருந்தது. அந்தத் தலையங்கத்தின் நோக்கத்தை அப்படியே எதிரொலித்து இருக்கிறது உச்சநீதிமன்றம்!

ஆம் ஆத்மி - காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு விழுந்த வாக்குகளை, செல்லாது என்று ஆக்கி - பா.ஜ.க. வேட்பாளரை, செல்லும் என்று கடைந்தெடுத்த மோசடித்தனத்தை அரங்கேற்றினார் தேர்தல் அதிகாரி. பா.ஜ.க. வேட்பாளர் தேர்வை ரத்து செய்து, ஆம் ஆத்மி - காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெற்றவராக அறிவித்து விட்டது உச்சநீதிமன்றம். இதனைவிட மகத்தான தீர்ப்பும் இருக்க முடியாது. இதனைவிட பா.ஜ.க.வுக்குப் பின்னடைவும் இருக்க முடியாது. இதற்கெல்லாம் வெட்கம், ரோஷம் இருக்கும் கட்சி அல்ல பா.ஜ.க.

சண்டிகர் மேயர் தேர்தலில் ஆம் ஆத்மியும், காங்கிரஸும் கூட்டணி அமைத்து ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை களத்தில் இறக்கியது. தேர்தல் முறையாக நடந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வெற்றி பெறும். எனவே, தேர்தலையே தள்ளி வைத்தார்கள். சனவரி 26ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனைச் சுட்டிக் காட்டினார்கள்.

“நாம் ஒற்றுமையாக நின்றுவிட்டாலே, அது பா.ஜ.க.வை மனரீதியாக பலவீனப்படுத்தி விடும். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

சண்டிகர் மாநகர மேயரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடக்க இருந்தது. ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. பா.ஜ.க.வுக்கு 14 கவுன்சிலர்கள் ஆதரவு இருந்தது. ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள் ஆதரவு இருந்தது. காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆம் ஆத்மியும், காங்கிரசும் இணைந்து போட்டியிட்டதால் மேயர் பதவியை ‘இந்தியா’ கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது. ‘இந்தியா’ கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வட மாநில ஊடகங்கள் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்ய வைத்து விட்டார்கள். தேர்தல் நடந்திருந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வென்றிருக்கும். ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியக் கூட்டணித் தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும்.” என்று முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையுடன் சொன்னார்கள்.

இதற்கு மாறாக சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார். இதனைத்தான் ‘முரசொலி’யின் முந்தைய தலையங்கத்தில் நடந்து விட்ட மோசடியைக் கடுமையாகக் கண்டித்திருந்தோம்.

“பா.ஜ.க.வுக்குத் தெரிந்தது நேரிய வழியல்ல, குறுக்கு வழி மட்டும்தான். அவர்கள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருப்பது அப்படித்தான். இதுதான் பா.ஜ.க.வுக்கு தெரிந்த ஒரே வழியாகும். அதைத்தான் மெய்ப்பித்திருக்கிறது சண்டிகர் மேயர் தேர்தல். பெரும்பான்மை பெற்று மேயராக ஆகி இருக்க வேண்டிய கட்சி ஆம் ஆத்மி ஆகும். ஆனால் கோல்மால் வேலைகளைப் பார்த்து மேயர் பதவியைக் கைப்பற்றி இருக்கிறது பா.ஜ.க.

பா.ஜ.க. எப்படி வென்றது? ஆம் ஆத்மியைச் சேர்ந்தவர்கள், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பா.ஜ.க.வுக்கு கட்சி மாறி விட்டார்களா? இல்லை. மாறாக, அவர்கள் அளித்த வாக்குகளைச் செல்லாது என்று ஆக்கிவிட்டு, பா.ஜ.க. வென்றதாக அறிவித்துவிட்டார்கள். இதை விட மகா கேவலம் இருந்திருக்க முடியுமா? சண்டிகர் மாநகராட்சியில் மொத்தமுள்ள 35 இடங்களில் காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி 20 இடங்களைப் பெற்றுள்ளது. பா.ஜ.க 14 கவுன்சிலர்களையும், சிரோன்மணி அகாலிதளம் ஒரு கவுன்சிலரையும் பெற்றுள்ளது. மேயர் பதவியை ஆம் ஆத்மி கட்சியும், இரண்டு துணை மேயர் பதவிகளை காங்கிரஸ் கட்சியும் பிரித்துக் கொண்டு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. ‘இந்தியா’ கூட்டணி வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் இது. தேர்தலில் காங்கிரஸ் - ஆம் ஆத்மி கூட்டணி 20 வாக்குகளையும், பா.ஜ.க. 16 வாக்குகளையும் பெற்றது. ஆனால் 8 வாக்குகளை செல்லாது என அறிவித்து பா.ஜ.க. குறுக்கு வழியில் வெற்றி பெற்றது. பா.ஜ.க.வின் மகா திருட்டுத்தனம் அல்லவா இது? மோடி தேர்தலா, மோசடித் தேர்தலா என்று எதிர்க்கட்சிகள் கேட்பது உண்மைதானே?

ஒரே ஒரு மேயர் தேர்தலிலேயே இத்தனை மோசடிகள் - முறைகேடுகள் - தில்லுமுல்லுகள் என்றால், நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் செயல், எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒற்றுமையின் மூலம் மட்டுமே இத்தகைய மோசடித்தனங்களை வீழ்த்த முடியும்” - என்று நாம் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

ஆம் ஆத்மி - காங்கிரஸ் கூட்டணியின் மேயர் வேட்பாளர் குல்தீப் குமார், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரி அனில் மாஷி, வாக்குச் சீட்டில் குறியீடு செய்து செல்லாததாக ஆக்கியது உண்மைதான் என்று நீதிபதிகள் முன் ஒப்புக் கொண்டார். ‘குறியீடு மட்டும் செய்யவில்லை, அந்த வாக்குச் சீட்டில் வரி வரியாக எழுதி இருக்கிறார் தேர்தல் அதிகாரி’ என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். ‘ஆம் ஆத்மிக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டில் மட்டுமே இதனை தேர்தல் அதிகாரி எழுதி உள்ளதால் அதனை குற்றச் செயலாகக் கருதவேண்டும்’ என்று தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு கூறியது. சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. அடைந்த வெற்றியையே ரத்து செய்தது உச்சநீதிமன்றம்.

**சிதைக்கப்பட்ட எட்டு வாக்குச் சீட்டுகளின் வாக்குகளையும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளருக்கு வழங்கி அவரை வெற்றி பெற்றவராக நீதிபதிகள் அறிவித்தார்கள். சண்டிகர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் மகத்தான தீர்ப்பை அளித்தது. முறைகேடு செய்த தேர்தல் அதிகாரி தண்டனைக்கு உள்ளாவார். அவரை முறைகேடு செய்யத் தூண்டியவர்களுக்கு என்ன தண்டனை?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (22.2.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டிற்கான மேலிடப் பொறுப்பாளர்கள் அஜய் குமார் மற்றும் ஸ்ரீவெல்ல பிரசாத் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி சார்பில்

# ‘எல்லார்க்கும் ஆனவர்’ சிறப்பு வாழ்த்தரங்கம்!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, பிப்.24-

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி சார்பில் “எல்லார்க்கும் ஆனவர்” உணர்ச்சிகளால் ஒரு விழா நிகழ்ச்சி இன்று (24.2.2024 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கலைஞர் அரங்கம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

மார்ச் 1 உடன்பிறப்புகளின் தலைவராய் உழைப்பால் உயர்ந்து - தமிழ்நாட்டின் முதலமைச்சராய் செயலால் உயர்ந்து - திராவிட மாடல் கோட்பாட்டு ஆட்சியை எல்லார்க்கும் சேர்த்து நடத்திக் காட்டி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள்.

உணர்ச்சியால் ஆன ஒரு விழாவாக கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி ஒருங்கிணைக்கிறது.

அனைவரையும் வருக வருக என கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி வரவேற்கிறது.

‘எல்லார்க்கும் ஆனவர்’ சிறப்பு வாழ்த்தரங்கத்தில் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமையுரையாற்றுகிறார்.

‘தாயுமானவர்’ என்ற தலைப்பில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ‘தலைவருமானவர்’ என்ற தலைப்பில் கம்பம் செல்வேந்திரன், ‘எதிர்காலத்துக் குமானவர்’ என்ற தலைப்பில் இயக்குநர் வெற்றி மாறன், ‘முதல்வருமானவர்’ என்ற தலைப்பில் பாரதி கிருஷ்ண குமார், ‘தந்தையுமானவர்’ என்ற தலைப்பில் முனைவர் ம.எழிலரசி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

# அமைச்சர் துரைமுருகன் திட்டவட்ட அறிவிப்பு

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் இப்போது எடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். இருந்தாலும், Cauvery Water Management Authority இந்தப் பிரச்சினையை அன்றைக்கு விவாதத்திற்கு எடுத்து விட்டார்கள். எடுத்ததற்கு பிறகு, ஒவ்வொருவரையும் பேச விட்டார்கள். கர்நாடக உறுப்பினர் என்ன சொன்னார் என்றால், உச்சநீதிமன்றம் இந்தத் திட்டத்திற்கு எந்த தடையும் பிறப்பிக்கவில்லை. ஆகையால், இந்தத் திட்டம் பற்றி விவாதித்து, முடிவு எடுத்து Central Water Commissionக்கு அனுப்பி வைக்கலாம் என்று அவர் சொன்னார். இந்த Central Water Commissionலேயே ஒரு member அங்கு இருக்கிறார். ஒன்றிய அரசினுடைய சார்பில் அவர் அங்கு memberஆக இருக்கிறார். அவர் என்ன சொன்னார் என்றால், உச்சநீதிமன்றத்தி லிருந்து எந்தவிதமான ஆணையும் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. இங்கு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய இயலாது. ஆகையால் திட்ட அறிக்கையை CWCக்கு திரும்ப அனுப்பிவிடலாம். கர்நாடகத்தைச் சார்ந்தவர் எடுக்கலாம் என்று சொன்னார்.

Central Water Commissionலிருந்து சென்ற member எடுக்கக்கூடாது என்று சொன்னார். கேரள உறுப்பினர், ”இப்பொருள் விவாதத்திற்கு ஏற்றது அல்ல என்றும், இது பன்மாநில நதி நீர் சம்பந்தப்பட்டதால் அதற்கேற்ற அமைப்புதான் ஆய்வு செய்ய வேண்டுமென்றும் தெரிவித்து, இந்த மேகதாது திட்ட அறிக்கையை CWCக்கே திருப்பி அனுப்பிவிடலாம் என்று அவர் சொல்லிவிட்டார்.

ஆனாலும், தற்போது நாம் சொல்லிட்டோம், பாண்டிச்சேரி அதே மாதிரி சொல்லிவிட்டார்கள். கேரளா சொல்லிவிட்டார்கள். மத்திய சர்க்கார் சார்பில் இருக்கிறவரும் அதே கருத்தைச் சொல்லிவிட்டார். ஆக ஒரே ஒருத்தர், கர்நாடக உறுப்பினர் மட்டும்தான் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்.

### விவாதத்திற்கு எடுக்கக்கூடாது!

இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்களே யொழிய, எந்தவிதமான ஓட்டெடுப்பும் நிகழவில்லை. கருத்துக்களை மட்டும் தெரிவித்தார்கள். இந்தக் கருத்துக்களையெல்லாம் கேட்ட ஆணையத்தின் தலைவர் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்துக்களின்படி மேகதாது திட்டத்தை

CWCக்கே திருப்பி அனுப்பிவிடலாம். வாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று ஆணையத்தின் தலைவரே சொல்லிவிட்டார். இவ்வளவு நடந்த பிறகும், எந்த ஆணையத்தின் தலைவர் இதை திருப்பி அனுப்பலாம் என்று சொன்னாரோ, அதே ஆணையத்தின் தலைவர் அந்தக் கூட்டத்தில் என்ன நடந்தது என்று கூட்டத்தின் minutesஐ நமக்கு அனுப்பினார். அந்த minutesல் என்ன எழுதுகிறார்கள் என்றால், அதில்தான் தவறு செய்கிறார்கள். அந்த minutesல் மேகதாது திட்டத்திலுள்ள பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அம்சங்களை பரிசீலித்து இந்தத் திட்டம் சாத்தியமா? இல்லையா? என்று முடிவெடுக்கவும் மற்றும் மேல் நடவடிக்கைக்காகவும் CWCக்கு அனுப்பவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

### நீதிமன்றம் செல்வோம்!

இவர் மட்டும் ஏற்றுக்கொண்டு அனுப்பலாம் என்று எல்லோரும் சொன்னதற்குப் பிறகு Minutes அங்கு எடுத்த முடிவு வேறு, Minutesல் வந்த முடிவு வேறு. இந்த Minutes வந்தவுடனே நாம் அதை எதிர்த்து அவர்களுக்கு தந்தி கொடுத்துவிட்டோம். Chairmanக்கும் letter எழுதிவிட்டோம். அதுபற்றி நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீதிமன்றத்துக்கும் செல்லப் போகிறோம். ஆக, இதுமட்டுமல்லாமல், ஜல் சக்தி அமைச்சகம், Forest Department, CWC Chairman ஆகியோருக்கு நம்முடைய துறை Secretary கடிதம் எழுதியிருக்கிறார். இந்தத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், இந்தத் திட்டம் உச்ச நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படாத திட்டம் என்பதையும், இம்மாநில நதிநீர்த் திட்டத்திற்கு படுகைக்குபன்மாநில நதிநீர்த் திட்டத்திற்கு படுகை மாநிலங்களிலிருந்து கர்நாடக அரசு இசைவினைப் பெறவில்லை என்பதையும் குறிப்பிட்டு நாங்கள் கடிதங்களை எழுதியிருக்கிறோம்.

### தமிழ்நாடு இசைவு இல்லாமல் ஒரு செங்கல்லை எடுத்து வைக்க முடியாது

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யார்? இவர்களுக்கு, CWCக்கு அனுப்பிவிடுவதாலேகூட இந்தத் திட்டம் நிறைவேறிட முடியாது. பிறகு அவர்கள் Forest Departmentல் permission வாங்க வேண்டும். அதற்குப் பிறகு Environment

Departmentல் அனுமதி வாங்க வேண்டும். துறைகளிடம் அனுமதி வாங்கினாலும்கூட தமிழ்நாட்டினுடைய இசைவைப் பெறாமல் அவர்கள் ஒரு ‘செங்கல்லைக்கூட எடுத்துவைக்க முடியாது’ என்பதை ஆணித்தரமாக இந்த அவையிலே நான் தெரிவிக்கிறேன்.

ஆனால், கர்நாடகத்திலே ஓர் அரசியலை நடத்துகிறார்கள். ஆக, பி.ஜே.பி. அரசு இருந்த காலத்திலும் இதேதான் சொன்னார்கள். காங்கிரஸ் அரசு இருக்கிற காலத்திலும் இதேதான் சொல்கிறார்கள். எந்தக் கட்சி எப்போது ஆட்சிக்கு வந்தாலும், யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் எடுத்தவுடனே இதைச் சொல்வதுதான். சித்தராமையா அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்தான். அவர் முதலில் தேவகவுடா அவர்களோடு இருந்தார். அப்போதே அவரோடு சேர்ந்துகொண்டு இந்த மேகதாது திட்டம் குறித்து பேசியவர்தான். தற்போது, கர்நாடக மாநில உள் துறை அமைச்சராக இருக்கக்கூடிய டி.கே. சிவக்குமார் அவர்களுடைய தொகுதி அது. அவர்களும் மேகதாது திட்டம் பற்றி பேசுகிறார். எனவே, ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன். ஏதோ அவர்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னதாலோ அல்லது கட்டியே தீருவோம் என்று வசனம் பேசுவதாலோ மேகதாதுவில் அணை கட்டிவிட முடியாது. காரணம், நம்முடைய இசைவு இல்லாமல் அவர்கள் எதையும் செய்ய முடியாது.

தமிழ்நாட்டில் பிறந்த எவரும் அதற்கு இசைவினைத் தர மாட்டார்கள், எந்தக் கட்சியாக இருந்தாலும். எனவே, அஞ்சத் தேவையில்லை. நம்முடைய அம்மையார் அவர்கள், நீங்கள் alliance வைத்திருக்கிறீர்களே ஏன் அவர்களோடு பேசக் கூடாதா என்று சொன்னார்கள். பேசக் கூடாது என்பதுதான் திட்டம். காரணம், பேசி, பேசி, பேசி நாங்கள் அலுத்துப் போய்தான் Tribunalஐயே கொண்டு வந்தோம். இப்போது ஒன்றும் வேண்டாம். மார்க்கண்டேயன் தகராறு. நாங்கள் வழக்கு போட்டோம். Supreme Courtல் சொன்னார்கள். எதற்கு நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு Tribunalஐ போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். உடனே அதை கெடுப்பதற்கு மறுபடியும் petition போடுவதற்காகவா? இல்லை, இல்லை. நாங்கள் புதிதாக வந்திருக்கிறோம், அவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். நாங்கள் பேசிக் கொள்கிறோம் என்று சொன்னோம். ஆனால், மறுபடியும் போட்டிருக்கிறார்கள். அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்களுக்கு எவ்வளவு அக்கறையும், ஆர்வமும், வேகமும் இருக்கிறதோ, அதே வேகம், அதே அக்கறை, அதே உணர்வு எங்களுக்கும் உண்டு.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், பாராளுமன்றத்திலே அவர்கள் ஏன் 22 நாட்களை முடக்கினார்கள் என்பதை பலமுறை சொல்லியிருக்கின்றேன். அன்றைய பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் மீது கொண்டுவர இருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தடுப்பதற்காகத்தான் அவர்கள் பாராளுமன்றத்தை முடக்கினார்களேதவிர, வேறு எதற்காகவும் அல்ல. அது பலமுறை பதிவு (குறுக்கீடுகள்) செய்யப்பட்டுவிட்டது. மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**அமைச்சர் துரைமுருகன்:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏதாவது பத்திரிக்கை newsல் கடைசி நாள் செய்தி வரவேண்டுமென்று இவ்வாறு செய்திருக்கிறார்கள். இது குறித்து, ஏற்கெனவே, 4 வழக்குகள் போட்டிருக்கிறோம். இது சம்பந்தமான same வழக்குதான். ”The Cauvery Water Management Authority has no power at all to discuss the matter of Mekedatu என்று நாங்கள் வழக்கு போட்டிருக்கிறோம். அவர்கள் கூட்டம் நடக்கும்போதும் சொல்கிறார்கள். Tooth and nail நாம் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆணையத்தை அமைத்தது Supreme Court. அந்த ஆணையத்திற்கு தலைவரை இவர்கள் periodல் நியமிக்கவில்லை. நாங்கள் வாதாடி, நாங்கள் பேசி இப்போதுதான் தலைவரை நியமித்த பின்னர்தான் இந்தக் ஆணையக் கூட்டமே நடக்கிறது.

இதெல்லாம் நாங்கள் Supreme Courtல் சொல்லாமல் இருப்போமா? நீங்கள் சொல்லவேண்டும் என்பதற்காக சொல்கிறீர்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு 4.7.2021 அன்று ஒரு கடிதம்,

31.3.2022ல் ஒரு கடிதம், 26.5.2021ல் ஒரு கடிதம், 13.6.2021ல் ஒரு கடிதம், பின்னர் நம்முடைய Minister for Jal Sakthiக்கு ஒரு கடிதம் என்று ஆணையம் தொடர்பாக இத்தனைக் கடிதங்களை எழுதியிருக்கிறார்கள்.

அதன் பின்னர்தான், Supreme Courtல் வாதாடி இந்த ஆணையத்திற்கு ஒரு தலைவரை நியமித்தார்கள். இதை அத்தனையும் மறந்துவிட்டு, இன்று வெளியே செல்ல வேண்டும் என்பதற்காக இங்கு ஒரு நாடகம் நடத்திவிட்டு சென்றிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பதிலளித்தார்.